அறிய வேண்டிய பதினான்கு பிரிவுகளில் மிகவும் உயர்ந்தவை வேதங்களே ஆகும். இவற்றில் கூறப்பட்டுள்ள ஆழ்ந்த பொருளை, இதிகாசம் மற்றும் புராணம் மூலமே அறிய இயலும். இதனை மஹாபாரதம் ஆதிபர்வம் (1-2-73) – இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத் விபேத்யல்ப ச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதிஷ்யதி - அற்பமான ஞானம் உடையவனைக் கண்டவுடன் வேதமானது, தன்னை அந்த மனிதம் தவறாக உணர்ந்து உபதேசிக்கப்போகிறான், தன்னை அவன் வஞ்சிக்கப் போகிறான் என்று எண்ணி நடுங்குகிறது - என்று கூறியது. ஆகவே வேதங்களை இதிகாசம் மற்றும் புராணம் மூலமே நன்றாக அறிந்து கொள்ள இயலும். இவற்றுள் புராணங்கள் என்பவை இதிகாசத்திற்குப் பின்னரே கூறப்படுவதால், இதிகாசங்களே மிகவும் உயர்ந்தது என்று அறிந்தவர்கள் கூறுகின்றனர். ஆகவே இராமாயணம் போன்று மஹாபாரதமும், நாம் தஞ்சம் அடைய ஏற்றதாக உள்ளது.